# அக இலக்கியங்களில் தோழியின் பங்கு

# Role of Friend in Internal Literature

***திருமதி ப. ஹேமலதா***
உதவிப்பேராசிரியர்
உண்ணாமலை கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, கோவில்பட்டி, தூத்துக்குடி

**P. Hemalatha**
*Assistant Professor*
*Unnamalai Arts and Science College*
*Kovilpatti, Thuthukoodi*

## ஆய்வுச் சுருக்கம்

*அக இலக்கியங்கள் என்று எடுத்து க்கொண்டால் தலைவன், தலைவி இருவரும்தான் முக்கியமானவர்கள். ஏனெனில் தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்வைக் கூறுவதே அகம் எனப்படுகிறது. அவளின்றி ஓரணுவும் அசையாது என்று கூறுமளவுக்குத் தோழி அக வாழ்வில் முக்கியமாவள். அவளின் அறிவுக் கூர்மை, உற்றுநோக்கும் திறன், உளவியல் திறன், அவள் ஒரு பிரச்சனையை அணுகும் முறை என அவளின் பண்பு நலன்கள் அனைத்தையும் இந்த கட்டுரை ஆய்வு செய்கிறது. மேலும் அக இலக்கணத்தில் தோழியின் இலக்கணம் அவளின் நலன்கள் பற்றி என்ன கூறுகிறது என்றும், இலக்கியங்களில் தோழியின் கூற்று பற்றி என்ன பகர்கிறது என்றும் இந்த கட்டுரை ஆய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *மடல் விலக்கு, இற்செறிப்பு, அறத்தோடு நிற்றல், பிரிவு அறிவுறுத்தல், வாயில்கள்.*

## Abstract

*Subjective literature is one of two genres of classical tamil poetry that concerns with the subject of love, the subject of war. It can also be translated as love and heroism. Thalaivan, thalaivi are playing vital role in subjective literature. The pleasure that arises when a man and woman come together with each other is felt internally, the internal part of life is called subjective literature. Especially thalaivi's friend playing an important role in subjective literature. This research deals about, her intellectual, chastity, deep analytical thinking, intelligence, the way she approaches the problem. Further it tells about her conduct and behaviour. This research stresses the importance of thalaivi's friend in subjective literature.*

***Keywords:*** *Lobe Subtraction, Interpolation, Convolution, Segmentation Instruction, Gates.*

**Citation**

Hemalatha, P. "Role of Friend in Internal Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 64–70.

**முன்னுரை**

*உலகின்முத்தமொழி, உலகின் மிகச் சிறந்தமொழி என அறிஞர் பெருமக்களால் போற்றுதலுக்குரிய தமிழ்மொழி ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. உலகின் வேறு எந்த மொழியிலும் வாழ்வியலை இவ்வளவு சிறப்பாகக் கூறியிருக்க முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. வாழ்வியலை அகம் என்றும் புறம் என்றும் இரு பெரும் பிரிவாகப் பிரித்து அதற்குப் பெரு விளக்கங்களையும் தந்துள்ளனர் நம்முன்னோர்கள். தனிமனித வாழ்வின் அந்தரங்கங்களை (காதல்) அகம் என்றும், மன்னர்களையும் அவர்கள் சார்ந்த நிர்வாகம், போர்முறைகள் ஆகியவற்றைப் புறம் என்றும் குறிப்பிடுவது நம் தமிழ்மொழி. புறம் என்ற சொல் பொதுவாழ்வைக் குறிக்கிறது. நம் கட்டுரையில் அகம் சார்ந்த கருத்துக்களைக் காணப்போவதால் அகம் என்ற சொல் குறிக்கும் மேலும் சில பொருளைக் காண்போம். அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காமஇன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருள்கள் உள்ளன. நம் ஆய்வுக் கட்டுரையில் அகம் என்ற சொல் தலைவன், தலைவி இருவர் சம்பந்தப்பட்ட களவு, கற்பு வாழ்க்கையில் தோழி பெறும் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பதைக் காண்போம்.*

**தலைவி மற்றும் தோழி**

*தலைவியும் தோழியும் ஓருயிர் ஈருடலாக வாழ்பவர்கள். தோழியானவள் தனக்கென வாழாமல் தலைவிக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்பவள். களவுக் காலத்திலும் கற்புக் காலத்திலும் தலைவிக்கு உறுதுணையாக விளங்குபவள் தோழி. இவள் எப்போதும் தலைவியை விட்டுப்பிரியாமல் அவளைச் சூழ்ந்தே இருப்பாள் என்பதைத் தொல்காப்பியத்தின் பொருளதிகார நூற்பா பின்வருமாறு கூறுகிறது.*

***சூழ்தலும் உசாத்துணை நிலைமையின் பொலிமே (124)***

*சூழ்ந்திருத்தல் மட்டுமல்லாது நன்கு ஆராய்ந்து நன்மை தீமைகளையும் தலைவிக்கு எடுத்துக்கூறுபவள். இந்த சூழ்தலும், உசாத்துணையுமே தோழியின் பொலிவிற்கான காரணங்கள் என இளம்பூரணர் குறிப்பிடுகிறார். இதையே நாற்கவிராசநம்பி அவர்கள் எழுதிய அகப்பொருள் விளக்கம் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.*

***தோழி செவிலி மகளாய் சூழ்தலோடு***
***உசாத்துணையாகி அசாத்தணி வித்தற்கு***
***உரிய காதல் மருவிய துணையே (110)***

**தோழியின் உளவியல் திறன்**

*தலைவி தோழியர் கூட்டத்தோடு விளையாடும் போது தலைவன் தலைவியைக் காண்கிறான். தலைவியும் தலைவனைக் காண்கிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். தூரத்தில் இருந்தவாறே தினமும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கின்றனர். இதைத் தன் உளவியல் திறத்தால் தோழி அறிந்து கொள்கிறாள். இங்கு உளவியல் திறன் என்பது தலைவியை உற்றுநோக்கி அவளிடம் ஏற்படும் மாற்றங்களை வைத்துத் தெரிந்து கொள்வதாகும். முதலில் அவளிடம் வீசும் ஒரு புதிய மணம் (வாசனை). அதாவது தலைவி தலைவனோடு கூடியதால், தலைவன் தன் மீது பூசிய சந்தனம், பூ போன்ற நாற்றம் தலைவியின் மீதும் வீசியது. இதனால் தலைவியின் தோற்றப்பொலிவு முன்பை விடப் பன்மடங்காகக் கூடியது. அடுத்ததாகத் தலைவி தோழியர் கூட்டத்தோடு சேராமல் தன்னைத் தனிமைப் படுத்திக்கொண்டாள். பின் இயல்பாகத் தான் உண்ணும் உணவை விடக் குறைவான*

*உணவை உண்டாள் தலைவி. பூப்பறித்தல், நீராடுதல் எனத் தலைவி தோழியர் கூட்டத்தோடு செய்யும் செயல்களைத் தனியாக செய்தாள். பல திசைகளிலும் தோழியரோடு ஓடியாடி விளையாடிய தலைவி ஒரே இடத்தில் விளையாடினாள். அதே இடத்திலேயே அதிகமாகத் தன் நேரத்தைக் கழித்தாள் தலைவி. இவ்வாறு தலைவியின் செயல்கள் அனைத்தையும் உற்றுநோக்கித் தலைவியின் காதலை அறிந்து கொள்கிறாள் தோழி. இதனை,*

***நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்***
***செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்***
***புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வரூஉம்***
***உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை. (112)***

*என்று தொல்காப்பியர் கூறுகிறார். மேலும் இருபொருள் பயக்கும் சொற்களைக் கூறித் தலைவிக்குப் புணர்ச்சி உள்ளதைத் தோழி ஆராய்ந்து அறிகிறாள் எனத் தொல்காப்பியம் பகர்கிறது.*

*இது மட்டுமல்லாமல் தலைவியும் தோழியும் சேர்ந்து இருக்கும் இடத்திற்குக் கையுறை (தழையும், கண்ணியும்) ஏந்திவருவான் தலைவன். பின் வந்தவன் தோழியிடம் அந்த கையுறையைத் தலைவியிடம் தருமாறு இரந்து நிற்பான். இதன் மூலமும் தலைவன் தலைவியின் காதலைத் தோழி உணர்ந்து கொள்கிறாள் என அகப்பொருள் விளக்கம் பின்வரும் நூற்பா மூலம் விளக்குகிறது.*

***முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்***
***இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என்று***
***ஒருமூன்று வகைத்தே பாங்கிமதி உடன்பாடு. (138)***

**களவில் தோழி**

*தோழி இல்லையெனில் தலைவன், தலைவியின் அகவாழ்வே இல்லை என்னுமளவிற்குக் களவு வாழ்க்கையில் முக்கியமானவள் தோழி. தோழியின் மூலமே ஒவ்வொரு செயலையும் நிகழ்த்துவான் தலைவன். களவுக் காலத்தில் தலைவியைக் கூட வேண்டும் என்ற தன் குறையைத் தோழியிடமே தலைவன் எடுத்துக் கூறுவான். அதை ஏற்றுக் கொள்ளாமல் அவ்விடத்தைவிட்டு நீங்குமாறு தக்க காரணத்தை எடுத்துக் கூறுவாள். காதல் சிறப்பதற்குப் பொய்யான சிலவற்றையும் எடுத்துக் கூறுவாள். நன்மை பயக்கும் சொற்களை நயமுடன் எடுத்துக்கூறுவாள். தலைவன் தலைவியற்கு வரும் துன்பங்களை நீக்கி அவர்களைப் பாதுகாப்பது தோழியின் கடமைகளாகும். இதனைத் தொல்காப்பியர்,*

***உறுகண் ஓம்பல் தன்னியல்பு ஆகலின்***
***உரியது ஆகும் தோழிகண் உரனே. (235)***

*என்கிறார். இதையே கலித்தொகையின் பாலைக்கலியில் வரும் 21ம் பாடல் இவ்வாறு கூறுகிறது.*

***கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்***
***பழவினை மருங்கின் பெயர்புபெயர்பு உறையும். (21)***

*பொருள் தேடுவதற்காக பிரிந்து செல்லக்கருதும் தலைவனை நினைத்து வருந்தும் தோழிக்காகப் பின்வருமாறு கூறுகிறாள். அதாவது பொருள் என்பது அவரவர்க்குரிய பழைய நல்வினைகளை ஒட்டியே வரும் போகும் இயல்பினை உடையது என்கிறாள் தோழி. இவ்வாறு கூறுவது தோழியின் அறிவுத்திறத்தை எடுத்துக் கூறுகிறது.*

**சாதுர்யப் பேச்சுத்திறன்**

*தோழி தான் கூறவேண்டிய பொருளைத் தாங்கிய சொற்களை நேரடியாகக் கூறாமல் வேறு சொற்களைப் பயன்படுத்திக் கூறுவாள். மேலும் தன்னுடைய சாதுர்யமான பேச்சுத்திறத்தால் தலைவனுடைய மனத்தையே மாற்றும் திறம் படைத்தவள். இவ்வாறு தான் கூறவந்ததை மறைத்துக் கூறுவதை அணியிலக்கண நூலான தண்டியலங்காரம் பரியாயவணி என்று கூறுகிறது.*

***கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்***
***பிறிதொன்று உரைப்பது பரியாயம்மே. (70)***

*அதாவது தான் எண்ணியதைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றைக் கூறுவது பரியாயம் என்கிறது.*

***மின்நிகராம் மாதே! விரை சாந்துடன் புணர்ந்(து)***
***நின்நிகராம் மாதவிக்கண் நின்றருள்நீ - தன்நிகராம்***
***செந்தீவர மலரும் செங்காந்தள் போதுடனே***
***இந்தீவரம் கொணர்வல் யான். (70)***

*மின்னல் கொடியை ஒத்த தலைவியே, நறுமணம் வீசும் சந்தனமரத்தைத் தழுவிநிற்கும் உன்னை ஒத்த மாதவிக் கொடியின் அருகில் நீ நிற்பாயாக! என்னை ஒத்த சிவந்த மலரான செங்காந்தள் மலரையும், நல்ல குவளை மலர்களையும் உனது கூந்தலில் சூடிக்கொள்ளப் பறித்து வருகிறேன் என்கிறாள். இது மேலோட்டமான கருத்து.*

*இது தலைவியைக் குறியிடத்து சேர்க்கத் தோழி கூறும் கூற்றாகும். இங்கு குறியிடம் என்பது தலைவியும் தலைவனும் சந்திக்கும் இடம் ஆகும். அதாவது தலைவனையும் தலைவியையும் சேர்த்துவைக்கக் கருதிய தோழி தலைவியுடன் தான் நின்றால் அவர்கள் சந்திப்புக்கு இடையூறாக இருக்கும் என நினைத்து, அதைத் தலைவியிடம் நேரடியாகக் கூறாமல் நீ இங்கு நில். நான் உனக்காகப் பூப்பறித்து வருகிறேன் என்று கூறிச் செல்வது தோழியின் சாதுர்யமாகப் பேசும் திறனை வெளிப்படுத்துகிறது.*

*தலைவன் தான் தலைவியை சந்திக்க உதவுமாறு தோழியிடம் கேட்கிறான். தோழி மறுக்கிறாள். உடனே தலைவன் மடல்ஏறுவேன் என்று கூறுகிறான். இதனை அகப்பொருள் விளக்கம் மடற்கூற்று என்கிறது. உடனே தோழித் தன் சாதுர்யமான பேச்சுத்திறத்தால் தலைவனின் மனத்தை மாற்றுகிறாள். இதனை அகப்பொருள் விளக்கம் மடல்விலக்கு என்று பகர்கிறது. தோழியின் கூற்றை ஏற்று மடல்ஏற மாட்டேன் என்கிறான். இதை அகப்பொருள் விளக்கம் மடல்கூற்று ஒழிதல் என்கிறது. இவ்வாறு தன் பேச்சுதிறத்தால் அனைவரின் மனத்தையும் மாற்றும் திறன் படைத்தவள் தோழி.*

**தோழி அறத்தோடு நிற்றல்**

*அறத்தோடு நிற்றல் என்பது தலைவன் தலைவியின் காதலைப் பெற்றோருக்குத் தெரியப்படுத்துதல் ஆகும். அறத்தோடு நிற்றலுக்கென ஒரு முறை வகுக்கப்பட்டுள்ளது. முதலில் தலைவியே அறத்தோடு நிற்றலுக்கு உரியவள். தலைவியே தன் காதலைத் தோழிக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும். அதன் பின்பே தோழி அறத்தொடு நிற்றல் வேண்டும். தோழி அறத்தோடு நிற்றல் என்பது தலைவியின் காதலை செவிலித் தாய்க்கு அறிவித்தல் ஆகும். இதனை அகப்பொருள் விளக்கம்,*

***முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளில்***
***சின்மொழிப் பாங்கி செவிலிக்கு உணர்த்தும். (50)***

*என்று பகர்கிறது. அதாவது தன் முன்பு நிற்கின்ற செவிலித் தாயை நோக்கிப் பிறரைக் கூறுவது போலக் கூறுவதும், நேரடியாகக் கூறுவதும் என இரு முறைகளில் தலைவியின் காதலை வெளிப்படுத்துகிறாள் தோழி.*

*தலைவி அறத்தோடு நிற்கும் போது தன் காதலின் ஆழத்தைத் தோழிக்கு உணர்த்துவதற்காகப் பின்வரும் பாடலைத் தோழியிடம் கூறுவதாக ஒரு திருக்குறளைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.*

***நெஞ்சத் தார்காதல வராகவெய் துண்டல்***
***அஞ்சுதும் வேபாக் கறிந்து. (1128)***

*தன் தலைவன் தன் நெஞ்சத்தில் இருக்கிறான். அதனால் நான் சூடான உணவுப் பொருள் எதையும் உண்பதில்லை. ஏனெனில் நான் சூடான உணவுப் பொருளை உண்ணும் போது அது தன் நெஞ்சத்தில் இருக்கும் தன் காதலனை சுட்டுவிடும் என்பதால் உண்ண மாட்டேன் எனத் தலைவி தோழியிடம் கூறுவதாக இந்த குறள் அமைந்துள்ளது. இவ்வாறு பல கருத்துக்களைக் கூறித் தலைவி அறத்தோடு நின்றதைத் தோழி செவிலியிடம் கூறுகிறாள். இவ்வாறு தோழி அறதோடு நின்றபின் செவிலி அறத்தோடு நிற்பாள். இதில் செவிலித் தாய் நற்றாயிடம் தலைவியின் காதலைத் தெரிவிக்கிறாள். பின் நற்றாய் தன் கணவன், மகனிடம் தெரிவிக்கிறாள். தலைவியின் காதலை மறுக்கும் பெற்றோராக இருந்தால் தலைவி இற்செறிக்கப்படுவாள். சம்மதம் தெரிவிக்கும் பெற்றோராக இருந்தால் தலைவனைப் பெண்கேட்டு வருமாறு தெரிவிப்பார்கள். இவ்வாறு பெண்கேட்டு வரும் தலைவனைக் குறித்துத் தோழி கூறுவதாக ஒரு அகப்பாடல் உள்ளது. அது பின்வருமாறு,*

***இரவு வந்தன்றால் திண்தேர், கரவாது***
***ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்***
***அரவச் சீறூர் காணப்***
***பகல் வந்தன்றால் பாய்பரி சிறந்ததே. (160)***

*முன்பெல்லாம் யாரும் அறியாமல் இரவு வேளையில் வந்து கொண்டிருந்த தலைவனுடைய தேர், தற்போது அனைவரும் அறியும் வண்ணம் பகல் வேளையில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த தோழி, இன்று உன்னை மணந்து கொள்வதால் ஆரவாரம் செய்யும் தனது தோழர்களுடன், அலர் பேசும் நம்மூர்ப் பெண்கள் காணும் படியாக பகலில் வருவதைக் கண்டு என் மனம் மகிழ்ச்சியால் நடுங்குகிறது. படிய வாரிவிடப்பட்ட கரிய கூந்தலாளே! உனக்கும் அவ்வாறு தான் உள்ளதா? எனத் தலைவியைப் பார்த்துக் கேட்கிறாள்.*

**உடன்போக்கு**

*தலைவன் தலைவி திருமணம் இரு வகைகளில் நடைபெறும் என அகப்பொருள் விளக்கம் கூறுகிறது.*

***குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டம் என்(று)***
***இரு வகைத்(து) ஆகும் கற்பிற் புணர்ச்சி. (56)***

*நாம் மேலே கண்ட அகப்பாடல் குரவரிற் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக் கூறலாம். இந்த வாயிலிற் கூட்டம் என்பது உடன் போக்கு வகையைச் சார்ந்தது. அதாவது தலைவியின் காதலை அறிந்த பெற்றோர் திருமணத்திற்கு சம்மதிக்காமல் தலைவி இற்செறிக்கப்படுவாள். இற்செறிப்பு என்பது தலைவியை வீட்டினுள் அடைத்து வைக்கப்படுவது ஆகும். கட்டுக்காவல் அதிகமானால் தோழி தலைவனுக்கு உடன்போக்கை அறிவுறுத்துவாள். ஆனால் தலைவன்*

*மறுப்பான். தோழி தலைவியின் நிலையை எடுத்துக் கூறித் தலைவனை உடன்பட வைப்பாள். தலைவனும் உடன்படுவான். பின் உடன்போக்கைத் தலைவிக்குத் தெரிவிப்பாள். தலைவி நாணம் அழியுமே என வருந்துவாள். ஆனால் பாங்கி கற்பின் மேம்பாட்டைத் தலைவிக்கு எடுத்துக்கூறி, அதனைத் தலைவி ஏற்று, தலைவனும் ஏற்று உடன்போக்கை ஏற்றுக் கொள்வார்கள். இதை,*

***போக்கு அறிவுறுத்தல் போக்கு உடன்படாமை***
***போக்கு உடன்படுத்தல் போக்கு உடன்படுதல்***
***போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றல் என்று***
***யாப்புஅமை உடன்போக்கு இருநான்கு வகைத்தே. (181)***

*என்று நாற்கவிராசநம்பி அவர்கள் பகர்கிறார்.*

**பிரிவு அறிவுறுத்தல்**

*தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்வான். அப்பொழுது அவன் தலைவியிடம் நேராகக் கூறாமல் குறிப்பால் உணர்த்துவான். இதை,*

***குறிப்பின் உணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு. (82)***

*என்று கூறுகிறது அகப்பொருள் விளக்கம். அதனால் தோழியிடம் கூறாமல் அறுவகைப் பிரிவிலும் (ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு) தலைவன் பிரிந்து செல்ல மாட்டான். இதை*

***சொல்லாது அகலினும் சொல்லும் பாங்கிக்கு. (81)***

*என்று கூறுகிறது நாற்கவிராசநம்பி அவர்கள் எழுதிய அகப்பொருள் விளக்கம்.*

**தலைவியைத் தேற்றுதல்**

*பொருளீட்டுவதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். அப்பொழுது தலைவனின் பிரிவைத் தாங்க முடியாமல் தலைவி வருந்துவாள். இதை முள்ளியூர்ப்பூதியார் அவர்கள் அகநானூற்றின் 173 ம் பாடலில் பின்வருமாறு பாடியுள்ளார்.*

***சிலநாள் தாங்கள் வேண்டும் என்றுநின்***
***நல்மாண் எல்வளை திருத்திலர் ஆயின்***
***வருவர் - வாழி, தோழி - பலபுரி***
***வார்கயிற்று ஒழுகை நோன்சுவல் கொளீஇ. (173)***

*துன்பம் கொண்டு வருந்தாதே. சில நாட்கள் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். சென்றவர் கண்டிப்பாக வருவார் எனத் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள்.*

**ஊடல் தீர்க்கும் வாயில்**

***தோழி தாயே பார்ப்பான் பாங்கன்***
***பாணன் பாட்டி இளையர் விருந்தினர்***
***கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்***
***யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (191)***

*மேலே குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பா வாயில்கள் பன்னிருவர் எனக் குறிப்பிடுகிறது. இதில் முதன்மையானவள் தோழியே. கற்பு காலத்தில், அதாவது திருமணம் முடிந்த பின் தலைவனுக்கும் தலைவிக்கும் மனப்பிணக்குகள் தோன்றும். அப்போது தோழி தலைவனுக்கு நல்ல அறிவுரைகள் கூறித் தலைவனைத் தலைவியோடு சேர்த்து வைப்பாள்.*

*தலைவியுடன் சமாதானம் பேசும் தலைவனைத் தலைவி ஏற்றுக்கொள்ளமாட்டாள். அப்போது தோழித் தலைவிக்கு அறிவுறை கூறித் தேற்றித் தலைவனுடன் சேர்த்து வைப்பாள்.*

**முடிவுரை**

*இவ்வாறு தோழியானவள் தலைவியின் மறு உருவமாகவே வாழ்பவள். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தோழி தேவந்தி, மாதவியின் தோழி வயந்த மாலை, மணிமேகலையில் மணிமேகலையின் தோழி சுதமதி என அனைத்துக் காப்பியங்கள், இலக்கியங்களிலும் இடம் பெற்ற தோழி கதாபாத்திரம் இலக்கணநூல்களில் கூறப்பட்டுள்ள தோழி கதாப்பாத்திரம் போலவே அமைக்கப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் ஆண் - பெண் நட்பும் கூட ஆரோக்கியமாக இருந்துள்ளது. உதாரணமாக அதியமானின் தோழியாக ஔவையார் இருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு தோழி கதாபாத்திரம் அன்றிலிருந்து இன்றுவரை இலக்கியங்களிலும் நடைமுறை வாழ்க்கையிலும் முக்கியமான கதாபாத்திரமாக உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.*

**மேற்கோள் நூல்கள்**


1. *புலியூர்கேசிகன், தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள், கௌரா பதிப்பகம், சென்னை.*
2. *முனைவர். ச.திருஞானசம்பந்தம் முதல் பதிப்பு, 2010, நாற்கவிராசநம்பி, அகப்பொருள் விளக்கம் (துறை விளக்கங்களுடன்) கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு.*
3. *முனைவர். ச.சுபாஷ்சந்திரபோஸ் ஐந்தாம் பதிப்பு, 2019, தண்டியங்காரம், இயல் வெளியீடு, 23பி/2739, தொப்புள்பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர்.*
4. *முனைவர். த. உமாராணி, முதல் பதிப்பு, 2017, காலம்தோறும், பெண்கள் (தொல்கப்பியர் காலம் முதல் கம்பர் காலம் வரை), அய்யனார் பதிப்பகம், 4/87, 6 வது தெரு, விநாயகபுரம், காரணைப், புதுச்சேரி, கூடுவாஞ்சேரி.*
5. *திருக்குறள் பரிமேலழகர் உரை - சாரதா பதிப்பகம், சென்னை-14*


## References


1. Puliurgasican, Tolkapiyam, Letter-Word-Meaning, Gaura Publishing House, Chennai.
2. Dr. S. Thirugnanasambandam First Edition, 2010, Quarkavirasanambi, Intrinsic Explanation (Sect with explanations) Kathir Publishing House, 93, South Road, Thiruvaiyar.
3. Dr. S. Subashchandra Bose Fifth Edition, 2019, Thandiyangaram, Physical Publication, 23B/2739, Doppalpillayar Temple Street, Thelakalangam, Thanjavur.
4. Dr. Umarani, First Edition, 2017, Time to Time Women (From Tolkappiyar Period to Gambar Period), Ayyanar Publishing House, 4/87, 6th Street, Vinayakapuram, Karnaip Puducherry, Guduvanchery.
5. Text by Thirukkural Parimelazakar – Sarada Publishing House, Chennai-14